# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
## C.C.No.25/17

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name கணேசன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2020

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் பிசிபட்டி அரசு நகரில் குடியிருந்து தேவாரம் பேரூராட்சியில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன்.என் மனைவி என்னுடன் வசித்து வருகிறார். என் மகன் ஆஸ்திரேலியாவில் பணிபுரிகிறார். என் மகள் திருமணம் முடிந்து சென்னையில் வசிக்கிறார். கடந்த 6.6.16ம் தேதி இரவு 8.00மணிக்கு என் மகளை பார்ப்பதற்காக நானும் என் மனைவியும் சென்னைக்கு புறப்பட்டு சென்றோம். நான் சென்னையில் இருந்த போது 13.6.16ம் தேதி மதியம் 12.00மணிக்கு என்நண்பர் பிடி செந்தில்கணேச் என்பவர் தொலைபேசியியல் தொடர்பு கொண்டு வெளி கதவும் வீட்டின் கதவும் திறந்து இருப்பதாகவும், நீங்கள் வந்து அதை பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் வருவதற்கு காலம் ஆகும் என்பதால் நீங்களே வீட்டிற்குள் சென்று பாருங்கள் என்று சொன்னேன். வீட்டிற்கள் சென்று பார்த்துவிட்டு வீட்டின் கதவுகள் உடைக்கபடப்டிருப்பதையும் பீரோ திறந்த நிலையிலும் அதில் இருந்த பொருட்கள் சிதறி கிடப்பதாகவும் என்னிடம் சொன்னார். நான் அவரிடம் போலிச்கு தகவல் சொல்ல சொன்னேன். நான் உடனே புறப்பட்டு 14.6.16ம் தேதி அதிகாலை 1.00மணிக்கு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வந்து பார்த்ததில் பீரோவில் இருந்த 5பவுன் கொதுமை செயின், 1 பவுன்கட்டிங் செயின், 1 பவுன் எடையுள்ள ஒரு ஜோடிதோடுகள் , தலா 1-2 பவுன் எடையுள்ள 2 மோதிரங்கள் ஆகியவையும் புதிதாக வாங்கியிருந்த டிஜிடிட்டல் கேன் கேமராவும் காணவில்லை. அதன்பின்பு நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அசாஆ.1. 24.6.16ம் தேதி காவல்நிலையத்தில் இருந்து குற்றவாளிகளை கண்டுபிடித்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். அதன்பின்பு நான் காவல்நிலையம் சென்றேன். என்னிடம் போலிசார் நகைகளை காண்பித்தார்கள். அங்கு ஆஜர் எதிரிகளும் இருந்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் நகைகள் என் வீட்டில் திருடு போன நகைகள் ஆகும். அது சாபொ.1. (எண்ணிக்கை-3). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

என்முதல்விசாரணையில் சொன்ன விசயத்தை தான் நான் போலிசாரிடும் சொன்னேன். 6.6.16 முதல் 13.6.16ம் ஆகிய தேதிகளில் எந்த தேதியில் என் வீட்டை உடைத்து நகைகளை திருடினார்கள் என்ற எனக்கு தெரியாது. அன்றையதினம் என் வீட்டின்பூட்டை உடைத்து நகைகளை திருடியவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். செந்தில்கணேசன் எங்கள்வார்டு கவுன்சிலர். நான் செந்தில்கணேசன் என்பவரிடம் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்ல சொன்னேன் அவரும் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். புகாரை நான் வீட்டில் வைத்து எழுதி காவல்நிலையத்தில் கொடுத்தேன். செந்தில்கணேசன் மற்றும் வக்கீல் தெய்வேந்திரன் புகார் கொடுக்கும் போது என்னுடன் வந்தார்கள். என்னை போலிசார் இரண்டு முறை விசாரித்தார்கள். காவல்நிலையம் மற்றும் எங்கள் ஏரியாவில் வைத்தும் போலிசார் விசாரித்தார்கள். நகை திருடு: போன பின்பு தான் என்னை போலிசார் விசாரித்தார்கள். எந்த தேதி என்றால் நான் புகார் கொடுத்த 5 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். 3வது முறை என்னை போலிசார் விசாரித்தார்கள். திரும்ப போலிசார் வரச்சொன்னபோது காவல்நிலையத்திற்கு நான் மட்டும் தான் சென்றேன். நான் காவல்நிலையம் செல்லும் போது நிறைய குற்றவாளிகள் இருந்தார்கள் என்றால் சரிதான் இவர்கள் தான் என்று குறிபபிட்டு என்னிடம் ஆஜர் எதாகளை காட்டினார்கள். ஆஜர் எதிரிகளை இந்த வழக்கிற்கு முன்னதாக எங்கும் நான் அவர்களை பார்த்ததில்லை என்றால் சரிதான். நான் சொன்னதேதியில் நான் காவல்நிலையம்சென்று என் நகைகளை வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும்

எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.